[1972 ஏப்ரல் 3

Mobile Hospital for Hosur Taluk

* 848 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether there is a proposal before the Government to sanction at least one mobile hospital for Hosur Taluk in Dharmapuri District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) அவ் வட்டத்தில் அரசின் நடமாடும் மருத்துவமனை ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மருத்துவ மாதுகள்

* 849 வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களின் தாய்-சேய் நல விடுதிகளில் பணியாற்றும் மருத்துவ மாதுகளையும், ஆயாக்களையும் மருத்துவத் துறையின் நிர்வாகத்திற்குக் கொண்டுவர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. கா. காளிமுத்து : அப்படியானால் அது எப்போது செயல்படுத்தப்படும் ? ஏதாவது காலவரையறை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது அந்தத் துறையைச் சார்ந்த இலாகாச் செயலாளரிடத்தில் பரிசீலனையில் இருக்கிறது. இன்னொரு இலாகாவின் மேற்பார்வையும் இருக்கும் காரணத்தால் அவர்களுடைய ஒப்புதலும் பெற்றுத்தான் முடிவு எடுக்கப்படும்.

Handloom weavers in Paramakudi

* 850 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state :

1972 ஏப்ரல் 3]

(*a*) whether it is a fact that Handloom Weavers in Paramakudi, Ramanathapuram district propose to go on hunger strike;

(*b*) whether the Master Weavers have honoured the settlement; and

(*c*) if not, the steps taken by the Government to meet the demands of weavers?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) தொழிலாளர் நல அதிகாரி இருதரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி வந்துள்ளார். மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தக் கருதியிருந்தார். 28-2-1972-ம் நாளன்று நிர்ணயிக்கப்பட்ட பேச்சு வார்த்தைகளுக்குத் தறி உடைமை யார்கள் வரவில்லை. யூனியன் பிரதிநிதிகள் மட்டும் வந்திருந்தனர். கைத்தறி உடைமையார்கள் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகின்றது. முன்னர் ஏற்றுக்கொண்டபடி ஊதியம் கொடுக்காத தறி உடைமையாளர்களை முதலில் அணுகுவதாகவும் தேவையானல் தொழிலாளர் நல அதிகாரியைப் பின்னர் அணுகுவதாகவும் சங்கப் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டிருக் கிறார்கள். நிலைமை இப்போது சீராக உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி மாஸ்டர் வீவர்கள் எல்லாம் கைத்தறி நெசவாளர்களுக்கு உரிய ஊதியத்தைக் கொடுக்காத பிரச்சினை நாடெங்கும் இருக்கிறது. ஆகவே, உடனடியாக கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கும் திட்டம் அமல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அரசு அதுபற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : பரிசீலனை செய்தால் போதாது. எந்தக் காலவரையறைக்குள் இப்படிப்பட்ட திட்டம் கொண்டு வரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பரிசீலனை செய்த பிறகு அதன் விளைவாக அந்தக் காலவரையறைபற்றித் தெரிவிக்கப்படும்.

[1972 ஏப்ரல் 3

திரு. கே. என். குமாரசாமி : கைத்தறி உடமையாளர் சங்கம் கலைக்கப்பட்ட காரணத்தால் தனித் தனியாகத் கைத் தறியில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் கோரிக்கை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சலைத்திருக்கிருர்கள். மீண்டும் அவர்களிடத்தில் தனித் தனியாகப் பேசி முடிக்கப்பட்ட ஒப்பந்தப் பிரகாரம் அவர்களுக்கான கோரிக்கையைக் கொடுக்க அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைப்பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கைத்தறி நெசவாளர் பிரச்சினையில் பரமக்குடி, மதுரை போன்ற இடங்களில் ஆண்டு தோறும் அரசு தலையிட்டு ஒப்பந்தம் ஏற்படுகிறது. அந்த ஒப்பந்தம் தாசில்தார் முன்னிலையிலோ ஆர்.டி.ஓ. முன்னிலையிலோ நடைபெறுகிறது. தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் ஏற்படும் நேரத்தில் அதை 12 (3) சட்டத்தின்படி என்ஃபோர்ஸ் பண்ண முடியும் என்ற நிலை இருக்கும்போது இங்கு அம்மாதிரி நிலை இல்லை என்று ஏற்படுகின்றது. மாஸ்டர் வீவர்கள் பல முறையில் ஒப்பந்தத்தை மீறுகிருர்கள். அம்மாதிரி இவர்கள் ஒப்பந்தத்தை மீருமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாஸ்டர் வீவர்களை அணுகி அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றனர். அதற்குள்ளாக தொழிலாளர் பிரதிநிதிகள் நாங்களே அணுகி முடிவுகாண்கிருேம். முடிவு காண வில்லை என்ருல் உங்களை அணுகுகிருேம் என்று தெரிவித்திருக் கிருர்கள்.

பீடி, சுருட்டு தொழில்கள் சட்டம்.

* 851 வினு—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

பீடி, சுருட்டு தொழிலாளர் சட்டம் தமிழ்நாட்டில் அமுலாவதை உயர்நீதி மன்றத்தின் மூலம் பீடி முதலாளிகள் 'ஸ்டே' உத்தரவுகள் பெற்று நான்கு ஆண்டுகளாகியும், அச்சட்டத்தை அமலாக்க நீதிமன்ற விசாரணையைத் துரிதப் படுத்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா ?